இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

“அவர்கள் உண்டுகொண்டிருந்தபொழுது அவர் அப்பத்தை எடுத்து, கடவுளைப் போற்றி அதைப் பிட்டு, அவர்களுக்குக் கொடுத்து, “இதைப் பெற்றுக்கொள்ளுங்கள்; இது எனது உடல்” என்றார். பின்பு அவர் கிண்ணத்தை எடுத்துக் கடவுளுக்கு நன்றி செலுத்தி அவர்களுக்குக் கொடுத்தார். அனைவரும் அதிலிருந்து பருகினர். அப்பொழுது அவர் அவர்களிடம், “இது எனது உடன்படிக்கையின் இரத்தம்; பலருக்காகச் சிந்தப்படும் இரத்தம். இனிமேல் இறையாட்சி வரும் அந்நாளில்தான் நான் திராட்சைப்பழ இரசத்தைக் குடிப்பேன்; அதுவரை ஒருபோதும் குடிக்க மாட்டேன் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன்” என்றார்.” *(14: 22-26)*

# திருஅவை பாவிகள் உட்பட எல்லாருக்குமானது!

## ‘பழமைவாதம் திருஅவைக்கு ஒவ்வாது’

**வத்திக்கான்:** BS Evening News என்ற ஊடகத்தின் இயக்குனர் Norah O’Donnell உடனான ஒரு நேர்காணலின் போது, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், ஒரு திறந்த திருஅவைப் பற்றிய தனது பார்வை மற்றும் உள்ளடக்கிய கொள்கையை வலியுறுத்தினார்.

நற்செய்தி என்பது பாவிகள் உட்பட எல்லாருக்குமானது என்று கூறிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், அதே வேளையில், திருஅவை சுங்க சோதனைச் சாவடிகளை அமைக்கத் தொடங்கினால், அது கிறிஸ்துவின் திருஅவையாக இருக்கும் தகுதியை இழந்துவிடும் என்றும் எச்சரித்தார்.

### ஒரே பாலினத்தவருக்கு ஆசீர்

Fiducia Supplicans என்ற திருஅவை கோட்பாட்டு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள ஒரே பாலினத்தவரை ஆசீர்வதிப்பது குறித்தும் தெளிவுபடுத்திய திருத்தந்தை, ஆசீர்வாதம் என்பது தனி நபர்களுக்கானது, அதனை ஒரே பாலினத்தவர் இணைந்து வாழ்வதற்கு வழங்க முடியாது, ஏனெனில், அது திருஅவைச் சட்டத்திற்கு எதிரானது என்றும் விளக்கினார்.


*நேர்காணல் வழங்கும் திருத்தந்தை பிரான்சிஸ்*

ஓரினச்சேர்க்கை ஒரு குற்றம் அல்ல" என்ற திருத்தந்தையின் கருத்தை பத்திரிகையாளர் நினைவு கூர்ந்து எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த திருத்தந்தை, இல்லை, இது ஒரு மனித நிலை (No. It is a human condition) என்று தனது கருத்தைத் தெரிவித்தார்.

### பழமைவாதம் (conservative)

அமெரிக்காவில் உள்ள சில பழமைவாத ஆயர்களின் விமர்சனம் குறித்த கேள்விக்கு பதிலளித்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், ஒரு பழமைவாதி என்பவர் எதையாவது பற்றிக்கொண்டு, அதற்கு அப்பால் பார்க்க விரும்பாதவர் என்றும், இது ஒரு தற்கொலை மனப்பான்மை, ஏனென்றால் பாரம்பரியத்தை கணக்கில் எடுத்துக்கொள்வது மற்றும் கடந்த கால சூழ்நிலைகளைக் கருத்தில் கொள்வது ஒன்று, மற்றொன்று தன்னை ஒரு பிடிவாதமான பெட்டியில் அடைத்துக் கொள்வது என்றும் விளக்கியுள்ளார்.

### பாலியல் முறைகேடுகள்

திருஅவைக்குள் நிகழும் பாலியல் முறை கேடுகள் குறித்தும் இந்நேர்காணலில் குறிப்பிட்ட திருத்தந்தை, இது சகித்துக் கொள்ள முடியாதது என்றும், அதே வேளையில், பாலியல் முறைகேடுகளின் சோகம் மிகப்பெரியது என்றும், மேலும் அது தண்டிக்கப்படுவது மட்டுமல்லாமல், மீண்டும் நடக்காமல் இருப்பதையும் உறுதிசெய்ய வேண்டும் என்பதால், இதுகுறித்து இன்னும் பல்வேறு காரியங் களைச் செய்யவேண்டியுள்ளது என்பதையும் அவர் ஒப்புக்கொண்டார்.

*செல்வராஜ் சூசைமாணிக்கம் - வத்திக்கான்*

# ஜொகூர், உலு தீராமில் எழுகிறது புதியதொரு ஆலயம்

**உலு தீராம், ஜொகூர்:** ஏறக்குறைய மூன்று தசாப்தங்களாக துல்லியமான திட்டமிடல் மற்றும் அசைக்க முடியாத அர்ப் பணிப்புக்குப் பிறகு, உலு தீராம் திருக்குடும்ப தேவாலயக் கட்டுமானப்பணி விடாமுயற்சியின் பலனாக தொடங்கப்பட்டுள்ளது. புதிய தேவாலயத்தை கட்டுவதற்கான ஒப்புதல் கடந்த மே 1, 2024 ஆம் தேதி நடைபெற்ற அடிக்கல் நாட்டு விழாவிற்கு வழிவகுத்தது. ஆறு குருக்கள் மற்றும் இரண்டு திருத்தொண்டர்கள் உட்பட சுமார் 500 பேர் கலந்து கொண்ட இந்த விழா, ஆயர் பெர்னட் போல் தலைமையில் நடைபெற்றது.

இது தேவாலய கட்டுமான பணிக்கு தலைமை பொறுப்பேற்ற அருட்தந்தை ராயன் இன்னாசிமுத்து மற்றும் திருக்குடும்ப தேவாலயத்தின் பங்குத்தந்தை மார்டினியன் லீ ஆகியோரால் ஒருங்கிணைக்கப்பட்டது. இவ்விழா உற்சாகமும் மரியாதையும் கலந்த சூழலுக்கு வழிவகுத்ததோடு, இது கலாச்சார பன்முகத்தன்மை கொண்ட கொண்டாட்ட மாகவும் இருந்தது. அன்று, சிங்க நடனத்துடன் தொடங்கிய இந்நிகழ்வை வரவேற்கும் வகையில் நகாஜட், சுமாசவ் மற்றும் கோலாட்டம் ஆகிய கலாச்சார நடனங்களும் இடம்பெற்றன.

இது திருக்குடும்ப தேவாலயத்தின் எதிர்கால ஒன்றிணைந்த பன்முகத்தன்மையைக் குறிக்கிறது என்றால் மிகையாகது. புதிய தேவாலயக் கட்டிடத்தின் பவனி மற்றும் அடையாளத் துவக்கம் ஆகியவை தேவாலயம் எழும்ப இருக்கும் துல்லியமான இடங்களில் நடைபெற்றது,

அன்று, இறைவேண்டல்கள், பாடல்கள் மற்றும் இதயப்பூர்வமான உரைகளுக்கு மத்தியில், கடந்த மற்றும் தற்போதைய தேவாலய கட்டிடக் குழு உறுப்பினர்கள், இறைமக்கள், அருட்தந்தையர் மற்றும் கடந்த கால மற்றும் தற்போதைய ஆயர்களின் உறுதியான ஆதரவின் அயராத முயற்சிகளுக்கு அருட்தந்தை ராயன் தனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்தார்.



இந்த அடிக்கல் நாட்டு விழா பல கட்ட திட்டத்தின் தொடக்கத்தை மட்டுமே குறிக்கிறது என்று அவர் வலியுறுத்தினார். எனவே, புதிய தேவாலயத்தின் வெற்றிகரமான நிறைவானது பயனாளி களின் தொடர்ச்சியான ஆதரவையும் தாராளமான பங்களிப்பையும் சார்ந்துள்ளது என்றும் இந்த நிகழ்வின் போது தொடங்கப்படும் நிதி திரட்டும் பிரச்சார மும் முக்கிய அம்சமாக விளங்கியதும் குறிப்பிடத்தக்கது

இதற்கிடையில், ஆயர் பெர்னட் போல் இந்த புதிய தேவாலயம் ஒரு உடல் அமைப்பை விட அதிகம் மேன்மையானது என்பதை அங்கிருந்த அனைவருக்கும் நினைவூட்டினார்; அது கிறிஸ்துவில் உறுதியாக வேரூன்ற வேண்டும். நற்செய்தியில் "மணலில் அல்ல, பாறையில் கட்டுங்கள்" என்று ஆண்டவர் கூறியது போல், திருஅவையின் அடித்தளம் இயேசு கிறிஸ்துவே என்பதை வலியுறுத்தினார். அவர் 'கிறிஸ்துவின் அரசாட்சியின் மீது நம்பிக்கை' என்ற சுருக்கத்துடன் இணைத்தார், இது திருஅவைஐயின் நீடித்த வலிமை மற்றும் நிரந்தரமாக கிறிஸ்துவின் இறையாண்மையில் நம்பிக்கை வைப்பதன் அவசியத்தை குறிக்கிறது என்று மேலும் கூறினார்.

ஆயர் பெர்னட் போல் மற்றும் தேவாலய கட்டுமான பணிக்கு தலைமை பொறுப்



பேற்ற அருட்தந்தை ராயன் இன்னாசிமுத்து மற்றும் திருக்குடும்ப தேவாலயத்தின் பங்கு அருட்தந்தை மார்டினியன் லீ ஆகியோர் மண் வெட்டியால் நிலத்தைக் கொத்தி இறைமக்களின் ஆன்மீக பயணத்தில் ஒரு புதிய வரலாற்றை தொடக்கி வைத்தனர். இந்த புதிய அத்தியாயத்தில் அவர்கள் களமிறங்கும்போது, உலு திராம் தேவாலயத்தினர் இறைவனால் அவர்களுக்கு வழங்கப்பட்ட நம்பிக்கை மற்றும் புதுப்பித் தலின் வாக்குறுதியை ஏற்றுக்கொண்டனர்.

*சில்வியா செபஸ்தியன்*

# புனித யூதா ததேயு பங்கில் 12 வார மறைக்கல்வி தொடர் பயிற்சி நடைபெற்றது

**ராவாங்:** கடந்த ஜனவரி 29 அன்று, இங்குள்ள புனித யூதா ததேயு பங்கின் இருபத்தைந்து உறுப்பினர்கள் மறைக்கல்வியொட்டிய 12 வார கற்றல் பயணத்தை மேற்கொண்டனர். ஒவ்வொரு திங்கட்கிழமையும் மாலை 8.00 முதல் இரவு 9.00 வரை இக்கற்றல்ப்பயணம் வெற்றிகரமாக நடைபெற்று வந்தது.

பயன்படுத்தப்படும் மொழி, இலக்கியம் மற்றும் உள்ளடக்கம் ஆகியவை அனைவருக்கும் சவாலாக இருக்கலாம் என்றும் கருத்துரைத்தார்.

கத்தோலிக்கத் திருஅவையின் மறைக்கல்வி நூல் மிகவும் விரிவாக இருப்பதால், 12 வார பயணம் உண்மையில் போதுமானதாக இல்லை என்றாலும் அனைத்து பங்கேற்



12 வார தொடர் பயிற்சியில் கலந்துகொண்டோர்

செந்துூல் பங்கைச் சேர்ந்த சகோ. ரிச்சர்ட் கணேஷ் அவர்கள், கத்தோலிக்கத் திருஅவையின் மறைக்கல்வி நூல் (CCC) வழி இறைமக்களுக்கு அறிவுறுத்தப்பட்ட படிப்பினையை எடுத்துரைத்தார். இறைவனால் நமக்கு வெளிப்படுத்தப்பட்ட நம்பிக்கையின் தொகுப்பாக கத்தோலிக்கத் திருஅவையின் மறைக்கல்வி நூல் உள்ளதாகப் பகிர்ந்து கொண்டார்.

சகோ. ரிச்சர்ட் அவர்களிடம் இந்நூல் குறித்து மேலும் வினவியபோது, கத்தோலிக்கத் திருஅவையின் மறைக்கல்வி நூல் பற்றிய எந்தவொரு ஆய்வும் சவாலான அனுபவமாக இருக்கும் என்றும், அதில்

பாளர்களின் பொறுமை, உறுதிப்பாடு மற்றும் நம்பிக்கை ஆகியவற்றைப் பார்ப்பதற்கு மகிழ்ச்சியாக இருந்தது என்றார்.

கத்தோலிக்க மறைக்கல்வியானது, மறைநூலில் ஆழமாக வேரூன்றியுள்ளது என்ற உண்மையுடன் இணைந்து, நமது ஆன்மீகத்தையும் நமது சொந்த நம்பிக்கையின் புரிதலையும் ஆழப்படுத்த அத்தொடர்பயிற்சி வழிவகுத்தது என்றார். மேற்கண்ட பயிற்சி கடந்த மே திங்கள் 6-ஆம் திகதி ஒரு முடிவை எய்தியது.

-அல்மெய்டா ஸ்டீலுஸ்

## திருத்தந்தையின் ஜூன் மாத இறைவேண்டல் கருத்து

போர் அல்லது பஞ்சத்தின் நிமித்தம் நாட்டைவிட்டு வெளியேறும் புலம்பெயர்ந்தோர், ஆபத்து மற்றும் வன்முறை நிறைந்த பயணங்களை மேற்கொள்ள வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர். அவர்கள் சென்றடையும் நாடுகளில் வரவேற்பையும் புதிய வாழ்க்கைக்கான வாய்ப்புகளையும் பெற்றிட மன்றாடுவோம்.

# மியான்மார் வான்வெளித் தாக்குதலில் இரு கிறிஸ்தவ கோவில்கள் சேதமடைந்தன!

**வத்திக்கான்:** மியான்மாரின் வழக்கமான இராணுவத்தின் வான்வழித் தாக்குதல்கள், மேற்கு மாநிலமான சின், டோன்சாங் நகரில் உள்ள லுங்டாக் கிராமத்தின் கத்தோலிக்க கோவில் ஒன்றையும் பாப்டிஸ்ட் கிறிஸ்த சபை கோவில் ஒன்றையும் தாக்கியுள்ளதாக ICN செய்தி நிறுவனம் கூறுகின்றது.



தகர்த்தப்பட்ட விண்ணக அன்னை ஆலயம்

மே 11 மற்றும் 12 தேதிகளுக்கு இடையில் நிகழ்ந்த இந்தக் குண்டுவெடிப்பு தாக்குதலில் மேலும் பொதுமக்களின் ஐந்து வீடுகள் தகர்க்கப்பட்டதாகவும், இதனால் அவர்கள் பெரிதும் அச்சமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கிறது அச்செய்தி நிறுவனம்.

இங்கு நிகழும் வன்முறை பொதுமக்களைத் தொடர்ந்து பாதிக்கிறது என்று கலே மறைமாவட்டத்தின் ஒரு பகுதியான Saga-ing பகுதியில் உள்ள தலத்திருஅவையைச் சேர்ந்த கத்தோலிக்கப் பார்வையாளர் ஒருவர் உள்ளூர் Fides செய்தி நிறுவனத்திடம் உரைத்ததாகவும் உரைக்கிறது அச்செய்திக் குறிப்பு.

மேலும் கிளர்ச்சிக் குழுக்களை ஒழிப்பதற்காக லுண்டாக் கிராமம் மியான்மார் விமானப்படையால் தாக்கப்பட்டது என்றும், பின்னர் அதன் இராணுவ வீரர்களால் மற்ற இரண்டு கிராமங்களும் ஆக்கிரமிக்கப்பட்டன என்றும் விவரிக்கிறது அச்செய்திக் குறிப்பு.

*செல்வராஜ் சூசைமாணிக்கம் - வத்திக்கான்*

# நற்கருணை: மறுகிறிஸ்துவாக வாழ்வதற்கு விடுக்கும் அழைப்பு

நற்கருணை புதிய உடன்படிக்கையின் அடையாளம், ஒற்றுமையின் அடையாளம் என்று சிந்தித்துப் பார்த்த நாம், நிறைவாக நற்கருணை நமக்கு விடுக்கும் அழைப்பு என்ன என்று சிந்திப்போம்.

1916 ஆம் ஆண்டு, போர்த்துக்கல் நாட்டில் உள்ள பாத்திமா நகரில் புனித கன்னி மரியா மூன்று சிறுவர்களுக்குக் காட்சியளித்தார். அம்மூவர்களில் ஒருவர்தான் புனித ஜெசிந்தா. இவர் நற்கருணையைக் குறித்துச் சொல்லக்கூடிய ஒரு செய்தி மிகவும் கவனத்திற்கு உரியது. இவர் சொல்லும் செய்தி இதுதான்: “நற்கருணை வழியாக இயேசு கிறிஸ்துவை இதயத்தில் சுமந்து செல்வோம்.” ஆம், ஒவ்வொரு நாளும் நற்கருணையை உள்கொள்ளும் நாம், இயேசுவை இதயத்தில் சுமந்து, மறு கிறிஸ்துவாக வாழவேண்டும். இவ்வாறு நாம் மறு கிறிஸ்து கிறிஸ்துவாக வாழ்கின்றபொழுது, மற்றவர்கள் நம்மைப் பார்த்துவிட்டு இவரல்லவா கிறிஸ்தவர், இவளல்லவா கிறிஸ்தவள் என்று விண்ண



கத்தில் உள்ள தந்தையைப் போற்றிப் புகழ்வார்கள் (மத் 5: 16). எனவே, நாம் புனித உடன்படிக்கையின் அடையாளமாக, ஒற்றுமையின் அடையாளமாக இருக்கும் நற்கருணையைத் தகுதியான உள்ளத்தோடு உள்கொண்டு, மறு கிறிஸ்துவாக வாழ முயற்சி செய்வோம் நற்கரிணை நமது வாழ்வாகட்டும்.

# நற்கருணை-அகவாழ்வின் ஆண்டவர்!

கிறிஸ்துவின் திருவுடல் திருஇரத்தம் பெருவிழாவை இன்று கொண்டாடுகிறோம். தூயமிகு நற்கருணை மீதான மக்களின் நம்பிக்கையை ஊக்குவிப்பதற்கு 13ம் நூற்றாண்டில் இத்திருவிழா அறிமுகம் செய்யப்பட்டது. ஆயினும், திருத்தூதர்கள் காலந்தொட்டு, தொடக்க காலக் கிறிஸ்துவர்கள் திருப்பலியைக் (கிறிஸ்துவின் திருவுடல் திருஇரத்தம்) கொண்டாடினர் என்பதை திருத்தூதர் பணிகள் (2:42) நூலில் வாசிக்கிறோம்.

இன்றைய முதலாம் மற்றும் இரண்டாம் வாசகங்கள், உடன்படிக்கை, பலி, இரத்தம் ஆகியவைப் பற்றி பேசுகின்றன. மோசே மக்களின் மீது மிருக இரத்ததைத் தெளித்து பழைய உடன்படிக்கையை உறுதிப்படுத்தினார் என முதலாம் வாசகம் (விப.24:3-8) கூறுகிறது. ஆனால், கிறிஸ்துவின் இரத்ததால் புதிய உடன்படிக்கை முத்திரையிடப்பட்டுள்ளது என இரண்டாம் வாசகம் (எபி.9:11-15) கூறுகிறது. இது ஓர் பரிணாம மாற்றம். காலந்தோறும் செய்து வந்த வழக்கத்தை மாற்றினார். கல்வாரியில் கிறிஸ்து சிந்திய இரத்தமும் வரலாற்றையே புரட்டிப் போடப்பட்டது.

இன்றைய பெருவிழா, மூன்று அம்சங்களை நினைவுப்படுத்துகிறது. நற்கருணை என்பது பலி, நற்கருணை என்பது அருளடையாளம்,




நற்கருணை என்பது இயேசுவின் உடனிருப்பு. பழைய ஏற்பாட்டில் மோசேயும் இஸ்ரயேல் மக்களும் பலியிட்டது மிருகப் பலி. புதிய ஏற்பாட்டில், இயேசு கிறிஸ்து தம்மையே பலியாக்கினார். தமது உடலாலும் இரத்தத்தாலும் நம்மிடையே புதிய உடன்படிக்கையை அவர் உறுதிப்படுத்தினார்.

இது அன்பின் பலி. நம்மீது உள்ள அன்பினால் தன்னையே கையளித்தார். நாம் அனைவரும் கடவுளின் பிள்ளைகளாக மாற வேண்டும் என்பதற்காக. "ஏனெனில் கடவுள் அன்பாய் இருக்கிறார்" கிறிஸ்துவ வாழ்வின் நோக்கமே நாம் அனைவரும் கடவுளின் பிள்ளைகளாக வேண்டும் என்பதே. "...இதைப் பெற்றுக்கொள்ளுங்கள்; இது எனது உடல் என்றார். பின்பு கிண்ணத்தை எடுத்து... இது எனது உடன்படிக்கையின் இரத்தம்.” (மாற்கு14:22-25) என்றார். இயேசு தமது உடல், பொருள், ஆவி எல்லாவற்றிலும் அன்பு சங்கமம் ஆகியிருப்பதை இது மெய்ப்பிக்கிறது. கடவுளின் அன்பின் வடிவாக உடலெடுத்த இயேசு, இவ்வுலக வாழ்க்கையின் ஒவ்வொரு செயலிலும் தமது அன்பின் விழுமியங்களை வெளிப்படுத்தினார். இயேசு கிறிஸ்துவின் உடலையும் இரத்தத்தையும் பெற்றுக் கொண்ட சீடர்கள் புகழ்ப்பாடல் பாடினர் (மாற்கு14:26). இது அவர்களின் மகிழ்ச்சி யின் எதிர்வினைச் செயல். கிறிஸ்துவின் உடலையும் இரத்தத்தையும் உட்கொண் டதன் விளைவால், அன்பின் வெளிப் பாடாக சீடர்கள் புகழ்ப்பாடலைப் பாடினர்.

**கிறிஸ்துவின் திருவுடல், திருஇரத்தம்**

| | |
|---|---|
| முதல் வாசகம் | வி.ப. 24: 3-8 |
| திரு.பாடல் | 116:12-13.15-16.17-18 |
| 2-ம் வாசகம் | எபி 9: 11-15 |
| நற்செய்தி | மாற்கு : 14: 12-16, 22-26 |

**ஞாயிறு வாசகம் ஆண்டு 2 (B)**
**வாரநாள் முதல் வாசகம் -ஆண்டு 2**
**திருப்புகழ் மாலை- பெருவிழாவக்குரியது**

பீடத்தில் அப்பமும் இரசமும் கிறிஸ்துவின் உடலாகவும் இரத்தமாகவும் மாறுகிறது. அப்பம் மற்றும் இரசத்தின் கருப்பொருள் மாறவில்லை; அதன் உட்கருப்பொருள் மாற்றம் (transubstantiation) காண்கிறது. இதுவே நமது நம்பிக்கை. அவ்வாறே, பீடத்தை அணுகி, நற்கருணையைப் பெற்றுக்கொள்ளும் பொழுது நமது புறத்தோற்றத்தில் மாற்றம் காணவிட்டாலும், அகத்தோற்றத்தில் மாற்றத்தைக் காட்டுவோம். அதுவே இறைவனுக்குச் சமர்ப்பிக்கும் புகழ்ப்பாடல் ஆகும்.

*-அந்தோணி இன்னாசி, சைபர் ஜெயா*